**<u>CC – 48/2022</u>** Dt: 27.09.2022

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.2542/2022 Dt–16.09.2022 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2022.

<u>27.09.2022</u>

<u>அ.சா.1–சக்திவேல், த/பெ.ராமமூர்த்தி</u>

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1)** எனது சொந்த ஊர் புழுதிக்குளம் என்றால் சரிதான். நான் கணேசன் மகள் மீனாட்சியைத் தான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் மனைவியின் ஊர் நாகனேந்தல் கிராமம் என்றால் சரிதான். நான் நாகனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

**2)** ஆஜர் 1 முதல் 3 எதிரிகள் பிறந்து வளர்ந்தது எல்லாம் நாகனேந்தல் கிராமம் என்றால் சரிதான். நாகனேந்தல் கிராமத்தில் நடக்கும் திருவிழாக்களில் குடிவரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சமீபத்தில் 4 ஆண்டுகளாக செலுத்தி வருகிறார்கள். ஆண்டு ஆண்டுகாலமாக எதிரிகள் குடிவரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

**3)** எனது மாமனார் கணேசன் வீட்டை தோப்புக்கார வீடு என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். நான் வீட்டோட மாப்பிள்ளையாக இருப்பதால் என்னையும் தோப்புக்கார மாப்பிள்ளை என்று கூப்பிடுவார்களா என்றால் இல்லை. நாகனேந்தல் கிராமத்தில் நடக்கும் பஞ்சாயத்துக்கள் எல்லாம் எனது தலைமையில் தான் நடக்கும் என்றால் இல்லை என்னோடு சேர்ந்து நான்கு நபர்களும் தலைமையில் நடக்கும்.

4) கடந்த 2020ம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலில் எனது அண்ணன் பாலகிருஷ்ணன் அஇஅதிமுக கட்சி சார்பில் ஒன்றிய கவுன்சிலராக போட்டியிட்டார் என்றால் சரிதான். அவரை எதிரித்து திமுக சார்பில் புழுதிக்குளம் கிராமத்தை சேர்ந்த சண்முகப்பிரியா என்பவர் போட்டியிட்டார் என்றால் சரிதான். எனது அண்ணன் தேர்தலில் தோற்று, சண்முகப்பிரியா வெற்றிபெற்றுவிட்டார் என்றால் சரிதான்.

5) ஆஜர் 1ம் எதிரியின் உடன்பிறந்த சகோதரர் உதயகுமார் நாகனேந்தல் கிராமத்தின் திமுக கிளைச்செயலராக இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் நாகனேந்தல் கிராமத்தில் அதிமுக கிளைச்செயலராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் உதயகுமார் திமுகவின் கிளைச்செயலராக இருக்கிறார் என்பதை தெரிந்துகொண்டு வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) உள்ளாட்சி தேர்தலுக்கு பின்பு நடந்த கிருஷ்ண ஜெயந்தி விழாவில் எதிரிகள் வீட்டில் குடிவரி வாங்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரியின் சகோதரர் கிருஷ்ணஜெயந்தி விழாவிற்கு வழக்கமாக ரேடியோ செட் கட்டுவார் என்றால் இல்லை ஒரே ஒரு தடவை தான் கேளல் கிராமத்தில் உள்ள மைக்செட்டை விழாவிற்கு ஏற்பாடு செய்தார்.

7) 1ம் எதிரியின் சகோதரர் தான் வழக்கமாக கிருஷ்ணஜெயந்தி விழாவிற்கு மைக்செட் கட்டுவார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக இல்லை என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உள்ளாட்சி தேர்தல் நடைபெற்ற பின்பு எனது மனைவியின் சகோதரர் சண்முகநாதன் தான் மைக்செட் கட்டினார் என்று சொன்னால் சரிதான்.

8) அப்போது, 1ம் எதிரியின் சகோதரர் நான் தான் வருடம் வருடம்

கட்டுவேன் ஏன் இப்போது மாற்றிவிட்டீர்கள் என்று எங்களிடம் கேட்டார் என்றால் சண்முகநாதன் ஊருக்காக நன்கொடையாக செய்ததால் 1ம் எதிரியின் சகோதரருக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை.

**9)** 2ம் எதிரி கருப்பாயி என் வீட்டிற்கு வந்து ஏன் எங்களிடம் வரி வாங்கவில்லை என்று கேட்டாரா என்றால் இல்லை. 2ம் எதிரி கருப்பாயி எனது வீட்டிற்கு வந்து ஏன் எங்களிடம் வந்து வரி வாங்கவில்லை என்று கேட்டதற்கு அசா.2 கோவிந்தராஜ் ஆஜர் 2ம் எதிரியை அடித்து காயம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல

**10)** 2ம் எதிரி கருப்பாயியை அடித்தது தொடர்பாக அசா.2 கோவிந்தராஜ் மீது கீழத்தூவல் காவல்நிலையத்தில் குற்ற எண்.180/2021ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

**11)** நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் எனது இடது பக்கத்தில் தான் அனைத்து காயங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் காயம்பட்டவுடன் நேரடியாக காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டேன் என்று சொன்னால் இல்லை காவல்நிலையத்தில் என்னை காயம் அதிகமாக உள்ளது அரசு மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்று கூறிவிட்டார்கள். மருத்துவமனைக்கு யாருடன் சென்றீர்கள் என்றால் எனது தம்பி கோவிந்தராஜ், எனது மைத்துனர் ஆகியோருடன் சென்றேன்.

**12)** மருத்துவர் என்னிடம் யார் எங்கு வைத்து எனக்கு காயம் ஏற்பட்டது என்று கேட்டார் என்றால் சரிதான். மருத்துவரிடம் அடையாளம் தெரிந்த இரண்டு பேர் அடித்ததாக சொன்னீர்களா என்றால் இல்லை 3 நபர்கள் அடித்ததாக கூறினேன்.

**13)** நான் முதல் முதல்விசாரணையில் கூறியது போல் ஆஜர் 2 மற்றும் 3ம்

எதிரிகள் கல்லால் எறிந்ததாகத் தான் போலிசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

14) உள்ளாட்சி தேர்தல் முன்விரோதத்தை வைத்து எதிரிகள் குடும்பத்தாரிடமிருந்து குடிவரி வசூலிக்க மறுத்ததை கேட்ட ஆஜர் 2ம் எதிரி கருப்பாயியை எனது தம்பி அசா.2 கோவிந்தராஜ் தாக்கி காயப்படுத்தியதற்கு கருப்பாயி வழக்கு தொடர்ந்து விடுவார் என்ற பயத்தில் நாங்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் போகும்போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

15) நான் எனது ஊரில் நான் வைத்தது தான் சட்டம் என்றாலும் அதைமீறியவர்கள் மீது இது போன்று பொய்யான புகார் கொடுப்பேன் என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகளை சேர்த்து கிருஷ்ணஜெயந்தி விழா கொண்டாடக்கூடாது என்பதற்காக நாங்கள் மட்டும் தனியாக கிருஷ்ணஜெயந்தி விழா கொண்டாடினோம் என்றால் வீட்டில் வைத்து கொண்டாடினோம்.

16) இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**CC – 48/2022** Dt: 27.09.2022

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.2542/2022 Dt–16.09.2022 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2022.

27.09.2022

அ.சா.2–கோவிந்தராஜ், த/பெ.ராமமூர்த்தி

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** அசா.1 எனது உடன் பிறந்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். எனது வீட்டிற்கும் எனது சகோதரர் சக்திவேல் வீட்டிற்கும் 300 முதல் 350 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். அசா.1ன் வீடு அபிராமம் மெயின்ரோட்டியில் உள்ளது என்றாலும் எனது வீடு ஊருக்குள் கடைசியில் உள்ளது என்றாலும் சரிதான்.

**2)** எனது அண்ணன் அசா.1 வீட்டின் அருகே உடையார், அழகுமுத்து மற்றும் தனுக்கொடி ஆகியோர் வீடு உள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி சண்முகநாதன் எனது அண்ணன் சக்திவேலின் மனைவியின் சகோதரர் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி கண்ணன் எனது அண்ணன் சக்திவேலின் மனைவி மீனாட்சியின் சகோதரி காந்திமதியின் மகன் என்று சொன்னால் சரிதான்.

**3)** அசா.1 கூறுவது போல் ஆஜர் எதிரிகள் எனது அண்ணனை அடித்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், நான் போகும்போது ஆஜர் 1முதல் 3 எதிரிகள் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். ஆஜர் 2ம் எதிரியை நான் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக வழக்கு

இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

**4)** என் மீது உள்ள வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நானும், அசா.1ம் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**5)** எனது அண்ணன் அசா.1யை எங்கு வைத்து பார்த்தீர்கள் என்றால் அவர் மயங்கி வீட்டில் கிடக்கும்போது பார்த்தேன். அசா.1க்கு மயக்கம் எத்தனை நாட்கள் கழித்து தெளிந்தது என்றால் முதலுதவி சிகிச்சை எடுத்த உடனே தெளிந்துவிட்டார். மருத்துவமனைக்கு செல்லும் முன்பாக வேறு எங்கும் சென்றீர்களா என்றால் காவல்நிலையம் சென்றோம். அங்கு போலிசார் அசா.1யை கேட்டபோது மயக்கத்தில் இருந்ததால் அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லசொன்னார்.

**6)** நானும், அசா1ம் ஒன்றாகத் தான் மருத்துவமனைக்குச் சென்றோம். நான் மருத்துவரிடம் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று கூறினேனா என்றால் கூறினேன். நான் மருத்துவரிடம் இரண்டு அடையாளம் தெரிந்த நபர்கள் கட்டையால் தாக்கியதாக கூறினேன் என்று சொன்னால் இல்லை கருப்பாயி என்பவர் என்னை களைக்கொத்தியால் தாக்கியதாகத் தான் நான் மருத்துவரிடம் கூறினேன்.

**7)** போலிசார் என்னை சம்பவம் நடந்த அன்று தான் விசாரித்தார்கள் என்றாலும் அதன்பின்பு வேறு எங்கும் விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். போலிசார் விசாரணையின் போது நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் என்ன கூறினேனோ அதை தான் குறிப்பிட்டு கூறினேன் என்றால் சரிதான்.

**8)** 2ம் எதிரி கருப்பாயி ஏன் என்னிடம் வரி கேட்க வில்லை என்று என்னிடம் கேட்க வந்தபோது நான் அவரை அடித்து காயம்

ஏற்படுத்திவிட்டு அந்த வழக்கிலிருந்த தப்பிப்பதற்காக பொய்யாக எனது அண்ணனை வைத்து புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.